செ.வெ.எண் -35 நாள்:20.02.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத்திறனாளிகளுக்கு 2017-18ம் நிதியாண்டிற்கு கை, கால் பாதிக்கப்பட்ட மற்றும் செவித்திறன் குறையுடைய மாற்றுத்திறனாளிகளுக்கு பல்லூடகப் பயிற்சி மற்றும் இலக்க புகைப்பட பயிற்சி சென்னையில் செயல்படுத்தி வரும் ஒருமாத கால பயிற்சி, தேசிய திரைப்பட வளர்ச்சி கழகத்தின் மூலம் கீழ்குறிப்பிட்டுள்ள ஆறு வகையான பயிற்சி வகுப்புகள் ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றன.

1. FCV டிஜிட்டல் நான் (லீனியர்) எடிட்டிங் - DNLE
2. AVID டிஜிட்டல் நான் (லீனியர்) எடிட்டிங் - DNLE
3. AVID பல்லூடக பயிற்சி – Multimedia Training
4. இலக்க புகைப்பட பயிற்சி – Digital Still Photography
5. ஆடியோ இன்ஜினியரிங்
6. அனிமேஷன்

**வயது வரம்பு:-** 18 முதல் 40 வரை

**கல்வித்தகுதி:-** 8ம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்

**மாற்றுத்திறனாளியின் தன்மை / சதவிகிதம்:-** கை, கால் பாதிக்கப்பட்டவர் (40% முதல் 60% வரை) செவித்திறன் பாதிக்கப்பட்டவர் (ம) மிதமான மனவளர்ச்சி குன்றியோர்.

மேற்கண்ட பயிற்சி மாற்றுத்திறனாளிகளுக்கு உரிய வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி, வாழ்க்கையில் முன்னேற்றம் அளிக்கும் வகையில் இருப்பதால், அரியலூர் மாவட்டத்தில் உள்ள மேற்குறிப்பிட்ட தகுதி வாய்ந்த அனைத்து மாற்றுத்திறனாளிகளும் **மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியரகம், அரியலூர் என்ற முகவரியில் தொடர்பு கொண்டு, விண்ணப்பித்து** பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.